بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# அண்டை வீட்டாரின் உரிமைகள்

பாகம் - 1

மனிதனுக்கு, உறவுகள் அவன் முன்னேறுவதற்கும் மன ஆறுதல் அடைவதற்கும் மிகப் பெரிய பாலமாக அமைந்துள்ளன. இந்த உறவுகள் இரத்த பந்தத்தின் மூலமும் பழக்கத்தின் மூலமும் ஏற்படுகிறன. இந்த உறவுகளை நல்ல முறையில் கவனித்து வருபவன் இம்மையிலும் மறுமையிலும் நல்ல நிலையில் வாழ்வான்.

இந்த உறவு முறைகளில் அண்டை வீட்டாருடன் ஏற்படும் உறவு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. இந்த உறவுகள் நமக்கு நல்ல முறையில் அமைய வேண்டும். அதை நல்ல முறையில் பராமரிக்கவும் வேண்டும். திருக்குர்ஆன், நபிமொழிகளில் அண்டை வீட்டாரின் உரிமைகளும் கடமைகளும் தெளிவாக விளக்கப் பட்டுள்ளது.

அல்லாஹ்வை வணங்குங்கள்! அவனுக்கு எதையும் இணையாகக் கருதாதீர்கள்! பெற்றோர்களுக்கும், உறவினர்களுக்கும், அனாதை களுக்கும், ஏழைகளுக்கும், உறவினரான அண்டை வீட்டாருக்கும், உறவினரல்லாத அண்டை வீட்டாருக்கும், பயணத் தோழருக்கும், நாடோடிகளுக்கும், உங்கள் அடிமைகளுக்கும் நன்மை செய்யுங்கள்! பெருமையடித்து, கர்வம் கொள்ளும் எவரையும் அல்லாஹ் நேசிக்க மாட்டான். (அல்குர்ஆன் 4:36)

நாம், நன்மை செய்ய வேண்டியவர்களின் பட்டியலில் அண்டைவீட்டாரை அல்லாஹ் இணைத்துள்ளான்.

மேலும் உறவினரான அண்டை வீட்டாராக இருந்தாலும் சரி! அல்லது உறவினரல்லாத அண்டை வீட்டாராக இருந்தாலும் சரி! அவர்களுக்கு நன்மை செய்வது முஸ்லிம்களின் கடமை என்பதை மேற்கூறிய வசனத்தில் அல்லாஹ் தெளிவுபடுத்துகிறான்.

அவ்வசனத்தின் இறுதியில் “பெருமையடித்து, கர்வம் கொள்ளும் எவரையும் அல்லாஹ் நேசிக்க மாட்டான்” என்ற வாசகத்தின் மூலம் அண்டை வீட்டாரை அற்பமாக நினைக்கக்கூடாது என்பதையும், அவர்களையும் நம்மை போன்றே எண்ண வேண்டும் என்பதையும் தெளிவுபடுத்துகிறான்.

## மூன்று வகை அண்டை வீட்டார்

அண்டை வீட்டார் அதிகபட்சமாக மூன்று உரிமைகளைப் பெற்றவராகத் திகழ்வர். அண்டை வீட்டில் உள்ளவர் முஸ்லிமாகவும் உறவினராகவும் இருந்தால் அவர்களுக்கு நாம் மூன்று வகையான உரிமைகளை வழங்க கடமைபட்டுள்ளோம். ஒன்று அண்டை வீட்டாரின் உரிமைகள், இரண்டாவது முஸ்லிம்களின் உரிமைகள், மூன்றாவது உறவினர்களின் உரிமைகள்.

அண்டை வீட்டார் முஸ்லிமாக மட்டும் இருந்தால் அவருக்கு இரண்டு உரிமைகள் வழங்கப்பட வேண்டும். ஒன்று அண்டை வீட்டாரின் உரிமைகள், இரண்டாவது முஸ்லிம்களின் உரிமைகள்.

அண்டை வீட்டார் முஸ்லிமாக இல்லாமலிருந்தால் அவருக்கு அண்டை வீட்டாரின் உரிமை மட்டும் கிடைக்கும்.

“அண்டை வீட்டார் மூன்று வகைப்படுவர். 1. ஒரேயொரு உரிமையுள்ள அண்டை வீட்டார். இவர் முஸ்லிமல்லாத அண்டை வீட்டார். அவருக்கு அண்டை வீட்டார் என்று உரிமை மட்டும் உள்ளது. 2. இரண்டு உரிமைகள் உள்ள அண்டை வீட்டார். இவர் முஸ்லிமான அண்டை வீட்டார். இவருக்கு அண்டை வீட்டார் உரிமையும், இஸ்லாமிய மார்க்க உரிமையும் உண்டு. 3. மூன்று உரிமைகள் உள்ள அண்டை வீட்டார். இவர் முஸ்லிமாகவும் உறவினராகவும் உள்ளவர். இவருக்கு அண்டை வீட்டடார் என்ற உரிமையும் இஸ்லாமிய மார்க்க உரிமையும் உறவுக்காரார் என்ற உரிமையும் உண்டு” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஜாபிர் (ரலி)

நூல்: தப்ரானீ அவர்களுக்குரிய முஸ்னதுஷ் ஷாமியீன்,

## கண்ணியப்படுத்துங்கள்!

நம் வீட்டில் விசேஷங்கள் ஏதும் நிகழ்ந்தால் முதலில் அண்டை வீட்டாருக்கு அழைப்புக் கொடுத்து அவர்களை கண்ணியப்படுத்த வேண்டும். ஆனால் இன்று சின்னப் பிரச்சனைகளால் சண்டையிட்டுக் கொண்டு திருமணம் போன்ற நிகழ்ச்சிகள் வரும் போது, ஊர் முழுக்க அழைப்பு கொடுப்பவர்கள் பக்கத்து வீட்டில் இருப்பவர்களுக்கு அழைப்பு கொடுப்பதில்லை. கொடுத்தாலும் கூட மரியாதை கலந்த அழைப்பாக இருப்பதில்லை. நபிகளார் அவர்கள் இது போன்று நடப்பவர்களுக்குப் பின்வருமாறு கட்டளையிடுகிறார்கள்.

“அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டவர் தம் அண்டை வீட்டாரை கண்ணியப் படுத்தட்டும்!” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) நூல்: புகாரீ (6019)

இறைவனின் அன்புக்கு அழகிய வழி

“அல்லாஹ்வும் அவன் தூதரும் விரும்புவது யாருக்கு மகிழ்ச்சி அளிக்குமோ அவர், தம் அண்டை வீட்டாரிடம் நல்ல முறையில் நடந்து கொள்ளட்டும்” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அப்துர்ரஹ்மான் பின் அபீ குராத் (ரலி)

நூல்கள்: ஷுஅபுல் ஈமான்-பைஹகீ (1502), ஹக்குல் ஜார், பக்கம்: 6.

## நபிகளாரின் இறுதி அறிவுரை

நபி (ஸல்) அவர்கள் இறுதி ஹஜ்ஜின் போது “நான் அண்டை வீட்டாரிடம் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டுமென வலியுறுத்துகிறேன்” என்று அதிகமாகக் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஉமாமா (ரலி)

நூல்: அல்முஃஜமுல் கபீர்-தப்ரானீ, பாகம்: 8, பக்கம்: 111

யார் முஸ்லிம்?

அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் முஸ்லிமாக இருப்பவன் அண்டை வீட்டாருக்கு நலம் நாடுபவனாக இருப்பான்.

“உன் பக்கத்தில் இருக்கும் அண்டை வீட்டாருக்கு நன்மை செய்! நீ முஸ்லிமாவாய்” என்று நபிகளார் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி)

நூல்: இப்னுமாஜா (4207)

## உதவுங்கள்

அண்டை வீட்டார் சிரமப்படும் போது அவர்களுக்குப் பொருளாதார உதவிகள் செய்வது, நோயுற்றால் மருத்துவரிடம் கொண்டு செல்வது, நோயுற்ற நேரத்தில் உணவுகளை சமைத்துக் கொடுப்பது என்று எல்லாவிதமான உதவிகளையும் செய்ய வேண்டும். நம் உறவினர்களுக்குச் செய்வதைப் போன்று அவர்களுக்கும் நாம் செய்ய வேண்டும். இதைப் பின்வரும் நபிமொழியிலிருந்து விளங்கலாம்.

"அண்டை வீட்டார் குறித்து என்னிடம் (வானவர்) ஜிப்ரீல் அறிவுறுத்திக் கொண்டேயிருந்தார். எந்த அளவிற்கென்றால், (எங்கே) அண்டை வீட்டாரை எனக்கு வாரிசாக்கி விடுவாரோ என்று கூட நான் எண்ணினேன்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி) நூல்: புகாரீ (6014)

## குழம்பில் தண்ணீரை அதிகப்படுத்துங்கள்

அண்டை வீட்டார் இருக்கிறார்கள் என்ற எண்ணம் நம்மிடம் எப்போதும் இருந்து கொண்டே இருக்கட்டும். நாம் நல்ல பொருள்களை சமைக்கும் போது அவர்களுக்கும் வழங்க வேண்டும். குறைவாக நாம் குழம்பு வைத்தாலும் அதில் கொஞ்சம் தண்ணீரைச் சேர்த்து அவர்களுக்கும் வழங்க வேண்டும்.

"அபூதரே! நீ குழம்பு வைத்தால் அதில் தண்ணீரை அதிகப்படுத்து! உன் பக்கத்து வீட்டாரை (அதைக் கொடுத்து) கவனித்துக் கொள்!" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூதர் (ரலி) நூல்: முஸ்லிம் (4758)

## அற்பமானது என்று கொடுக்காமல் இருந்து விடாதீர்!

நாம் அண்டை வீட்டாருக்கு வழங்கும் பொருள் தரம் உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்பது நிபந்தனையில்லை. சாதாரண பொருளாக இருந்தாலும் அதை வழங்க வேண்டும். கொடுப்பவரும் வாங்குபவரும் அதை அற்பமாகக் கருதக் கூடாது.

"முஸ்லிம் பெண்களே! ஓர் அண்டை வீட்டுக்காரிக்கு ஓர் ஆட்டின் குளம்பை (அன்பளிப்பாகக்) கொடுத்தாலும் அதை(க் கொடுப்பதையும் பெறுவதையும் அவர்கள்) இழிவாகக் கருத வேண்டாம்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) நூல்: புகாரீ (2566)

அன்பளிப்புச் செய்வதில் முதலிடம்

ஒருவருக்கு மட்டுமே அன்பளிப்புச் செய்ய முடியும், குறைவான பொருட்களே இருக்கின்றன என்றால் அண்டை வீட்டாரில் நம் வீட்டு வாசலுக்கு யார் பக்கத்தில் இருக்கிறாரோ அவருக்கு வழங்க வேண்டும்.

"அல்லாஹ்வின் தூதரே! எனக்கு இரண்டு அண்டை வீட்டார் உள்ளனர். அவர்களில் யாருக்கு நான் அன்பளிப்புச் செய்வது?" என்று கேட்டேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள் "இருவரில் யார் வீட்டு வாசல் உனக்கு நெருக்கமாக இருக்கிறதோ அவருக்கு" என்றார்கள்.

அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி) நூல்: புகாரீ (2259)

## சிறந்ததைத் தேர்வு செய்யுங்கள்

நம்மிடம் உள்ளதில் எது மட்டமானதோ அல்லது எதைச் சாப்பிட நாம் விரும்ப மாட்டோமோ அத்தகைய பொருள்களை அண்டை வீட்டாருக்கு வழங்காதீர்கள்! நல்ல தரமான பொருள்களை வழங்குங்கள். நீங்கள் சாப்பிடுவது சாதாரணமான பொருளாக இருந்தால் அதை வழங்குவதில் தவறில்லை. அதே நேரத்தில் மட்டமான பொருட்களாகத் தேர்வு செய்து வழங்கக் கூடாது.

நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் சம்பாதித்ததில் தூய்மையான வற்றையும், பூமியிலிருந்து உங்களுக்கு நாம் வெளிப்படுத்தியதிலிருந்தும் (நல் வழியில்) செலவிடுங்கள்! கண்ணை மூடிக் கொண்டே தவிர எதை வாங்கிக் கொள்ள மாட்டீர்களோ அத்தகைய மட்டமான பொருளைச் செலவிட நினைக்காதீர்கள்! அல்லாஹ் தேவையற்றவன்; புகழுக்குரியவன் என்பதை அறிந்து கொள்ளுங்கள்! (அல்குர்ஆன் 2: 267)

"எனது உயிர் எவன் கைவசம் இருக்கிறதோ அவன் மீது ஆணையாக! தமக்கு விரும்பியதை தன் அண்டை வீட்டாருக்கு அல்லது தன் சகோதரனுக்கு விரும்பாத வரை ஒரு அடியான் (உண்மையான) நம்பிக்கை கொண்டவனாக மாட்டான்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அனஸ் (ரலி) நூல்: முஸ்லிம் (71)

**இன்ஷா அல்லாஹ் தொடரும்...**

---

### குர்ஆன், ஹதிஸ் ஒளியில் வாரம் ஒரு துஆ
### பள்ளிவாசலுக்குள் நுழையும் போது

اللَّهُمَّ افْتَحْ لِي أَبْوَابَ رَحْمَتِكَ

அல்லாஹும்மப்(F)தஹ் லீ அப்(B)வாப(B) ரஹ்ம(த்)தி(க்)க

இதன் பொருள் : இறைவா! உனது அருள் வாசல்களை எனக்காகத் திறப்பாயாக. *ஆதாரம்: முஸ்லிம் 1165*

---

**மறுமை வெற்றிக்கு வழிகாட்ட குர்ஆன், ஹதீஸ் ஒளியில் பல்வேறு தலைப்புகளில் மார்க்கப் புத்தகங்கள் & V C D க்கள் உள்ளன. இடம் :அபுதாபி தவ்ஹீத் ஜமாஅத் மார்கஸ். எலக்ட்ரா ரோடு. அல் இப்ராஹீமி ரெஸ்டாரன்ட் பில்டிங் அறை எண் 1303**

---

**தவ்ஹீத் ஜமாஅத் (TNTJ) அபுதாபி**

*எலக்ட்ரா ரோடு. அல் இப்ராஹீமி ரெஸ்டாரன்ட் பில்டிங் அறை எண் :1303*

Visit:www.onlinepj.com,www.tntj.net